JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW- - Pw- 8 Witness
for Prosecution

| CC.No. | 156/2025 | Crime No. | | Station | |
|---|---|---|---|---|---|

| Name | **Pw.8 திரு முரளி** | Village |
|---|---|---|
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| The Oath was administered to the witness by Tmt.K.Sivakami, Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of Oaths Act of 1969 on 18.03.2026 | | |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்பொழுது நாமக்கல் மாவட்டம் மொளசி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் அம்மாபேட்டை காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணியில் இருந்த பொழுது, கடந்த 23.06.2023 ஆம் தேதியன்று மதியம் 13.00 மணிக்கு நிலைய சிறப்புஉதவியாளர் தர்மலிங்கம் என்பவர் நிலைய அலுவலில் இருந்த பொழுது முகாசிபுதூர், மாரியம்மன் கோவில் அருகில் உள்ள ஏடி காலனியில் வசிக்கும் கந்தசாமி என்பவரது மனைவி சங்கீதா என்பவர் நிலையமாஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரினை பெற்று நிலைய குற்ற எண் 152/ 2023, சட்டப்பிரிவுகள் 279, 304(A) IPC கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த நிலைய உதவி ஆய்வாளர் பழனிச்சாமி என்பவர் முதற்கட்ட புலன் விசாரணை செய்து, பிரேத விசாரணை செய்து தொடர் புலன் விசாரணைக்காக என்னிடம் ஒப்புவித்த வழக்குக் கோப்பை பெற்று நான் சம்பவ இடம் சென்று பார்வையிட்ட போது சம்பவ இடம் மாதிரி வரைபடத்துடன் ஒத்திருந்ததால் புதியதாக எதுவும் தயார் செய்யவில்லை.

மேற்படி, சாட்சிகளை விசாரித்த போது அவர்கள் மேற்படி உதவி ஆய்வாளரிடம் கூறியதையே என்னிடமும் கூறியதால், புதியதாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை.

பின்னர் 23.09.2023ஆம் தேதியன்று நிலையம் ஆஜராகி குற்றத்தை ஒப்புக்கொண்ட எதிரி விவேக் என்பவரை கைதுக்கான காரணம் கூறி கைது செய்தும், தக்க நிலையப் பிணையில் விடுவித்தேன். விபத்தில் தொடர்புடைய வாகனங்களின் ஆவணங்களை பெற்று மோட்டார் வாகன ஆய்விற்கு அனுப்பி வைத்தேன். **TN 29 BA 3146 என்ற பதிவு எண் கொண்ட TVS XL SUPER வாகனத்தின் மோட்டார் வாகன**

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.18 18:16:42 +0530

**ஆய்வு அறிக்கை அ.சா.ஆ.6 ஆகவும், TN 24 AT 4812 என்ற பதிவு எண் கொண்ட ஸ்ப்ளெண்டர் பைக்கின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.7 ஆகவும்குறியீடு செய்யப்படுகிறது.** அன்றைய தினமே பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் கவிதா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றேன். **பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பிரேத பரிசோதனை அலுவல் பார்த்த காவலர் தீபன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு உதவியாளரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இத்துடன் எனது புலன் விசாரணையை முடித்து எதிரி மீது சட்ட பிரிவுகள் 279, 304(A) IPC கீழ் இறுதி அறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த விபத்தில் இறந்த நபர் இளவர் என்றால், சரிதான். இறந்தபோது அவருக்கு வயது சுமார் 14 இருக்கும் என்றால், சரிதான். நான் முதல்விசாரணையின் சொல்வது போல், சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் புகார் எதுவும் பெறப்படவில்லை என்றாலும், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும், சாட்சிகள் யாரையும் விசாரிக்கவில்லை என்றாலும், வழக்கு ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால், சரியல்ல. ஆஜர் எதிரியின் கவனக்குறைவால் இந்த விபத்து ஏற்படவில்லை என்றால், சரியல்ல.

மேலும், தான் முறையாக புலன் விசாரணை செய்யாமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரியல்ல. இந்த வழக்கில் இறந்த நபர் தான் வாகனத்தை ஓட்ட தெரியாமல் ஓட்டி எதிரி மீது மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால், சரியல்ல. எதிரி வண்டியில் நின்று தான் கொண்டிருந்தார் என்றாலும், இந்த விபத்தில் இறந்த நபர் தான் இடித்து விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்றால், சரியல்ல. எதிரி மது அருந்தி விட்டதால் தான் வாகனம் ஓட்டாமல் நின்றிருந்தார் என்றாலும், இந்த வழக்கில் இறந்த நபர் தான் மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றால், சரியல்ல. எதிரியின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதையால் இந்த விபத்தை ஏற்படவில்லை என்றால், சரியல்ல.

Signature of Witness

Taken down before me in open court readover to the witness in the presence of the accused pleads and admitted by him/her to be correct

RAJKUMAR J

Digitally signed by RAJKUMAR J
Date: 2026.03.18 18:16:48 +0530

Sd/- (J.RAJKUMAR)

**Judicial Magistrate No.1, Bhavani**